**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026ம் வருடம் பிப்ரவரி மாதம் 27 நாள் வெள்ளிக்கிழமை**

**I.A.No.01/2025**
**in**
**O.S.No.113/2025**

1. அரியக்கா
2. பஞ்சவர்ணம்
3. முத்து
4. மலர் ...மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

/எதிர்/

கெங்காதேவி ...எதிர்மனுதாரர்/வாதி

இந்த இடைநிலை மனு என் முன்பாக 27.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.J.உதுமான் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.கோவிந்தராமு அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

கடந்த 19.11.2015ம் தேதி ஏற்பட்ட மனுதாரர்களுக்கு எதிராக ஏற்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு ரத்து செய்ய ஏற்பட்ட 3214 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மனுவை கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக்கோரி காலவரையறை சட்டம் பிரிவு 5ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>**

மனுதாரர் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவார். அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். மற்ற மனுதாரர்களுக்கும் சேர்த்து நானே இந்த அவிடவிட்டைத் தாக்கல் செய்வதாகவும் மனுதாரர் கண்ட எதிர்மனுதாரர்/வாதி மனுதாரர் மீது முதுகுளத்தூர் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 113/2015 வழக்கு தாக்கல் செய்திருந்ததாகவும், அந்த வழக்கில் மனுதாரரை பிரதிவாதிகளாக காட்டியிருந்ததாகவும், மனுதாரர்கள் பல்வேறு முகவரிகளில் வாழ்ந்து வருவதாகவும், மனுதாரர் ஆடுகளை கிடைபோடும் கீதாரி தொழில் செய்து வருவதால் நாடோடிகளாக ஒவ்வொரு ஊர்களுக்கும் சென்று வந்து கொண்டிருப்பதாகவும் இந்நிலையில் மனுதாரர்கள் இவ்வழக்கில் ஆஜராகததால் மனுதாரர்கள் மீது கடந்த 19.11.2015ம் தேதி ஒருதலைப்பட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றும் அதனை ரத்து செய்ய மனுதாரர்கள் மனுத்தாக்கல் செய்திருந்ததாகவும் ஆனால்ம னுதாரர்கள் தங்கள் வேலை நிமித்தம் வெளியூர்களுக்கு கிடை போடும் இடங்களுக்கு சென்று அங்கு ஆடு மேய்க்கும் இடையர்களுக்கு சமைத்து போட வேண்டியிருந்ததால் மனுதாரர்களால் வழக்குரைஞரை உரிய காலத்தில் சந்திக்க முடியவில்லை என்றும் அதனால் மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்களின் பழைய வழக்குரைஞர் மனுதாரர்களுக்கு எழுதியதாக சொல்லும் சாதாரண தபால் எதுவும் மனுதாரர்களுக்கு கிடைக்கவில்லை என்றும் இந்நிலையில் வாதியானவர் மனுதாரர்கள் ஊருக்கு வந்திருந்த சமயத்தில் மனுதாரர்கள் மீது அவர்

ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெற்று விட்டதாகவும், தாவாச் சொத்தை விற்பனை செய்யப்போவதாகவும் கடந்த 10.02.2025ம் தேதி ஊரில் பிரஸ்தாபம் செய்துள்ளார் என்றும் எனவே மனுதாரர்கள் பழைய வழக்குரைஞரை தொடர்பு கொண்டு கேட்டதற்கு இவ்வழக்கில் மனுதாரர்களுக்கு எதிராக 10.06.2016 தேதி ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டதாகவும், தற்போது பொதிகுளம் கிராமம் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் சம்பந்தமாக முதுகுளத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லையென்றும், எனவே சமூகம் நீதிமன்றத்தில் வாதி பெற்ற தீர்ப்பாணையை ரத்து செய்து கொள்ள மனுத்தாக்கல் செய்து கொள்ளும்படியும் கூறிவிட்டார் என்றும் எனவே நாங்கள் தற்போது நியமித்திருக்கும் வழக்குரைஞரை வைத்து முதுகுளத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஒ.எஸ்.113/2015 நீதிமன்றத்தில் அசல் வழக்கு தீர்ப்பாணையுடைய நகலை கடந்த 20.03.2025ம் தேதி வாங்கிப் பார்த்த போதுதான் எங்கள் மீது தாவாச் சொத்து சம்பந்தமாக எதிர்மனுதார்/வாதி ஒருதலைப்பட்சமாக தீர்ப்பானை பெற்றுள்ளார் என்பது எங்களுக்கு திடமான தெரியவந்தது என்றும் மனுதார்கள் அசல் வழக்கு எண்.113/2015 வழக்கில் ஆஜராகி வழக்கு நடத்திக் கொள்ள முடியாமல் போனது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எங்களுடைய பழைய வழக்குரைஞர் எங்களுக்கு அனுப்பியதாகச் சொல்லும் சாதா தபால் எங்களுக்கு கிடைக்காததாலும் நாங்களும் எங்களுடைய தொழிலுக்காக ஒவ்வொரு ஊராக செல்லவேண்டியது இருந்ததாலும் எங்களாலும் உரிய காலத்தில் எங்கள் வழக்குரைஞரை சந்திக்க முடியவில்லை என்றும் மேற்படி உத்தரவால் எங்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்றும் எனவே அந்த உத்தரவை

ரத்து செய்ய நாங்கள் உரிய காலத்தில் மனுத்தாக்கல் செய்ய முடியாமல் 3214 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. மேற்கண்ட காரணங்களினால் ஏற்பட்டதாகும். எனவே 3214 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து நாங்கள் தாக்கல் செய்துள்ள மனுவையும் ஏற்றுக்கொள்ள உத்தரவிட வேண்டியது அவசியமாக இருக்கிறது. இல்லாதுபோனால் எங்களுக்கு பெருத்த பாதகம் ஏற்படும் என்றும் எனவே 3214 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து மனுவை கோப்பிற்கு எடுக்க உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்.**

எதிர்மனுதாரரால் வியக்தமாய் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகள் தவிர மற்றவற்றை மனுதாரர்களே தங்களது சொந்தப் பொறுப்பில் நிரூபித்து கொள்ள வேண்டும் என்றும் மனுதாரர்களால் ஆட்சேபணை செய்யப்படுகிறது. மனுதாரர்கள் மனுவில் 3214 நாட்கள் காலதாமதத்திற்குரிய காரணம் ஏதும் சொல்லவில்லை என்றும் ஏதோ ஆடு மேயக்கும் தொழில் செய்ததாகவும் அதனால் பழைய வழக்கறிஞர் தகவல் சொல்லவில்லை என்று கூறியிருப்பது வியப்பாக உள்ளது என்றும் ஆடு மேய்க்கும் தொழில் செய்தால் ஏதோ தனது சொந்த ஊருக்கே வராமல் நாடோடியாக வாழ்ந்து வந்தார்கள் என்பது போல் சொல்லியுள்ளதாகவும் ஆனால் உண்மையில் ஆடு மேய்க்கும் தொழில் சில காலம் தனது சொந்த ஊரிலும், சில காலம் ஆடு மேய்க்கும் ஊர்களிலும் தான் இருந்து வருவார்கள். தனது சொந்த ஊர்களில் இருக்கும் சுக துக்க நிகழ்ச்சிகளில் தவறாமல் பங்கு கொல்வார்கள். மேலும் வருடத்திற்கு ஒருமுறை கிருஷ்ணஜெயந்தி விழாக்களில் மழைக்காலம் என்பதால் அனைவரும்

ஊரில் தான் இருப்பார்கள். மனுதாரர்கள் கிருஷ்ணஜெயந்தி நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடத்துவார்கள் என்றும் அதற்கு கிராமத்தில் உள்ள அனைவரும் கிராமத்திற்கு வரி கொடுக்க வேண்டும் மேலும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும். இப்படியல்லாம் இருக்கும் போது ஏதே ஆடு மேய்க்கும் தொழில் நாடோடி வாழ்க்கை என்றும் ஊருக்கு வர முடியாத நிலை இருந்தது போது மனுவில் மனுதாரர் சொல்லியிருப்பது புதிதாக உள்ளது என்றும் மேலும் மனுதார்கள் மற்றும் எதிர்மனுதார் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் ஆகவே வழக்கின் அனைத்து விபரங்களும் பல வருடஙகளுக்கு முன்பே தெரியும் என்றும் ஆனால் அனைத்தையும் மறைத்து ஏதே தற்போது தான் வழக்கு விபரத்தை தெரிந்து கொண்டதாக கூறி மனு செய்யதிருப்பது தவறு என்றும் மனுதார்கள் மனுவில் தற்போது வரை வழக்கில் நடந்த விபரத்தை குறிப்பிட்டுள்ளார்கள் ஆனால் 3214 நாட்கள் காலதாமதத்திற்கு ஏற்ற காரணம் எதும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் மனுதார்கள் ஏற்கனவே மனுதார்கள் மனுவில் குறிப்பிட்டது போல் ஒரு தலை பட்ச உத்தரவை ரத்து செய்ய மனு செய்து மேற்படி மனுவும் அந்த கால கட்டத்திலேயே தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதாகவும் அதன் பின்பு பல வருடங்கள் கழித்து தற்போது இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் மனுதார்களின் மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் மனுதார்கள் வேண்டுமென்றேதான் இந்த மனுவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் காலதாமதத்திற்கான ஏற்றுக் கொள்ளத்தக்க காரணம் எதையும் மனுதாரர் தனது மனுவில் கூறாததிலிருந்தே மனுதாரர் பக்கம் நியாயமான காரணம் ஏதுமில்லை என்பதும் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலுமே இந்த மனுவைத் தாமதமாகத்

தாக்கல் செய்துள்ளார்கள் என்பதும் தெளிவாகிறது என்றும் மனுவில் குறிப்பிட்டிருக்கும் காரணங்கள் இதே வழக்கில் சரி செய்யக் கூடியவை ஆகும். இந்த காரணங்கள் formal defect–ம் இல்லை என்றும் sufficient ground–ம் இல்லை என்றும் எனவே மனுதார்களின் மனு ஏற்கத் தக்கதல்ல என்றும் Each and every day of delay should be explained என்பது விதியாகும். சொல்லப்படும் காரணத்திற்கும் ஆதாரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் இந்த மனுவைத் தாக்கல் செய்திருப்பதில் மனுவை ஏற்றுக் கொள்வதற்கு எந்தவித Bonafide reason இல்லாத நிலையில் மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத் தக்கதாகும் என்றும் மிகவும் கால தாமதமாக இந்த மனுவைத் தாக்கல் செய்திருப்பதில் மனுவை ஏற்றுக் கொள்வதற்கு எந்தவித Bonafide reason–ம் இல்லாத நிலையில் மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யத் தக்கதாகும் வழக்கை இழுத்தடிப்பதற்காக ஏதாவது மனு செய்வதை மனுதார்கள் வழக்கமாகக் கொண்டுள்ளார்கள் என்றும் காலதாமதத்திற்கு சரியான ஆவணங்கள் தாக்கல் செய்யாமலும் இருந்தால் மனுவை தள்ளுபடி செய்து பல முன் தீர்ப்புகள் உள்ளது என்றும் இந்நிலையில் மனுவை சரியான காரணம் இன்றி தாக்கம் செய்ததால் மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எனவே 3214 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கும் அளவிற்கு போதிய காரணங்கள் இல்லாததால் மனுவை அதிக பட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

4. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

(i) அசல் வழக்கானது கடந்த 10.06.2016ந் தேதி வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கின் மனுதாரர் ஆஜராகாத நிலையில் அசல் வழக்கு ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்த விவரம் மனுதாரர்களுக்கு 20.03.2025ந் தேதி தெரிந்து 3214 நாட்கள் காலதாமதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஒரு தலைபட்ச உத்தரவை ரத்து செய்வதற்கு மனுதாரர்கள் தரப்பில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காலதாமத நாட்களாக மனுவில் 3214 நாட்கள் என குறிப்பிடப்பட்டு அதிகமான காலதாமதத்துடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள் தரப்பில் 3214 நாட்கள் காலதாமதத்திற்கு முறையான காரணங்கள் சொல்லப்படவில்லை என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் கடுமையான ஆட்சேபனை செய்யப்பட்ட போதிலும் வாதி தரப்பில் கோரிய காரணங்கள் ஏற்றுக்கொள்ளும்படியாக உள்ளது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும் வாதி மற்றும் பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரணை மேற்கொண்டு வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்பதாலும், இருதரப்பையும் கேட்க வேண்டும் என்ற இயற்கை நியதியை பின்பற்றியே இறுதி முடிவு காணவேண்டும் எனவும், இந்நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை செலவுத்தொகைவுடன் அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.**

இம்மனுவின் செலவுத்தொகையாக மனுதாரர்கள் ரூ.10,000/-யை எதிர்மனுதாரர்/வாதிக்கு வரும் 10.03.2026ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.

அழைக்க **13**.03.2026

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 27.02.2026 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.27 15:40:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.27 15:40:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.